செய்து பார்க்கிற நோத்தில், பலன்தரும் வேறு வெரைடி கண்டு பிடித்து இருக்கிறார்களா? பெல்லாரி வெங்காயத்தைப் பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இங்கே கொடுத்து இருக்கும் விவர அறிக்கையில், அதுபற்றி விளக்கம் இல்லை. பெரிய பெரிய டவுன்களில் பெல்லாரி வெங்காயம் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, உடனடியாக அதற்கு ஏதுவாகிற வகையில் பெரிய வெரைடி வெங்காயத்தைக் கண்டு பிடித்து, விவசாயிகள் பயிர் செய்ய கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பெல்லாரி வெங்காயத்தைப் பற்றிய பரிட்சை இன்னும் முடிவு அடையவில்லை. நல்ல பலன் தரக்கூடியது என்பது உறுதியாகவில்லை. சி.எஸ். 911 என்ற வெங்காயத்தை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் பரப்பி வருகிறோம். இதில் சுளைகள் சிறிதாக இருக்கின்றன. மக்கள் இதை விரும்புகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், நல்ல சிவப்பு நிறமாக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஏக்கருக்கு ஏறத்தாழ 60 நாட்களில் 5 டன்—5,000 கிலோ பயிராகிறது. இது மிகுதியான பலன் தருவதால் மக்கள் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாகப் பரப்பப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விதைகள் தேவைப்படுமானால் துறை மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. என். மருதாசலம்: வெங்காயத்திலே கறி வெங்காயத்தைக் காட்டிலும் ஈர வெங்காயம் அதிகச் சத்துள்ளது என்று சொல்லப் படுகிறது. அதை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெங்காயம் ஈரமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஈர வெங்காயம் என்பது சின்ன வெங்காயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குகிறார்கள். இது சின்ன வெங்காயந்தான். இதன் சுளை சிறிதாக இருக்கும் காரணத்தால் மக்களால் விரும்பப்படுகிறது. விளைச்சல் அதிகமாக இருக்கும் காரணத்தால் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற உறுப்பினர்களும், மற்றவர்களும் மிகுதியான அளவில் இதைப் பயிரிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 3]

திரு. கோவை செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்துள்ள விளக்கக் குறிப்பில் நாட்டு வெங்காயம், பெல்லாரி வெங்காயம், புதுரக வெங்காயங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப் போன்ற விவசாயிகளுக்கு சிலோன் மார்க்கட் விழும்போது வெங்காயத்தை வாங்க ஆள் இல்லை. அதை ஸ்டாக் செய்யவும் முடியாது. காய்ந்து விடும்.

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச் சரக்கை
மங்காத சீரகத்தைத் தந்திடேல் தேடேன் பெருங்காயத்தை
ஏரகத்துச் செட்டியாரே"

என்பார்கள். ஆகவே, வெங்காயத்தின் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அல்லது பதப்படுத்தவாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இலங்கைக்கு அதிகமாக ஏற்றுமதி செய்வது, பதப்படுத்தி வைப்பது என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைக் கூற முடியும். இப்போது இந்தப் புது ரக வெங்காயத்தைப் பயிரிடுவது பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. இதை ஊடு பயிராக சில சில இடங்களில் பயிரிட்டு 60 நாட்களில் நல்ல பலன் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும், விவசாய மக்களும் இதைப் பயிரிட முன்வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 547 . . .

(உறுப்பினர்கள் திரு. நா. வீராசாமி, திரு. கு. காமாட்சி மற்றும் சிலர் எழுந்து நின்றனர்)

அரை மணி நேரத்தில் ஆறு கேள்விகளுக்குத்தான் விடை அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏதாவது இதைப் பற்றி விளக்கம் வேண்டுமென்றால் என்னிடம் தனியாகக் கூடக் கேட்கலாம்.

Production of green manure

* 547 Q.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the